بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡم   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡم   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

விருந்து உபசரிப்பு அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாகும். எந்த அளவுக்கு அல்லாஹ்வுக்கு விருப்பமானதென்றால் இதைப் பற்றி ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தொடர்பாக திருக்குர்ஆனில் இரண்டு முறை அல்லாஹ் கூறியுள்ளான்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய நடைமுறை நம்முன் இருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொண்டுள்ளவர்களை எந்த மூன்று விஷயங்களை செய்யும்படி கூறியுள்ளார்களோ அவற்றில் மூன்றாவது விஷயம் விருந்தினர்களுக்கு கண்ணியமளியுங்கள் என்பதாகும்

ஓர் அழகிய, அமைதிகரமான சமூகம் உருவாகுவதற்கு இது அடிப்படையாகும். அல்லாஹ்வின் கட்டளைகளில் இந்த கட்டளை உள்ளது. மேலும் இது நம்பிக்கையாளர்களின் அடையாளமாகும்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் லண்டனிலுள்ள ஹதீகத்துல் மஹ்தியில் (மாநாட்டுத்திடல், ஆல்டன்) 02 ஆகஸ்ட் 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று மீண்டும் U.K ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றான். கடந்த மாதம் ஜெர்மனி, கனடா மற்றும் அமெரிக்காவின் ஆண்டு மாநாடு நடைபெற்றது. மேலும் உலகத்தில் மேலும் பல நாடுகளில் ஜல்ஸா நடைபெற்றது. மேலும் ஒவ்வொரு இடத்திலும் மிகவும் சிறப்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்துழைப்பின் வாக்குறுதிகள் நிறைவேறுவதைப் பார்க்கின்றோம். மேலும் U.K வின் ஜல்ஸா ஸாலானா தமக்கென்று ஒரு அந்தஸ்தை பெற்றுள்ளது. அதாவது உலகத்தின் பார்வை இதன் மீது உள்ளது. நம்மவர்கள் மற்றும் அந்நியர்களின் பார்வை இதன் பக்கம் இருக்கின்றது. மேலும் எல்லா வகையிலும் இந்த ஜல்ஸா உலகளாவிய ஜல்ஸா என்ற அந்தஸ்து பெற்றுள்ளது. ஏனென்றால் கிலாஃபத்தின் தலைமையகம் இங்குள்ளது.

ஆக இந்த அடிப்படையில் உலகத்தின் பல்வேறு நாடுகளிலுள்ள நம்மவர்களும் அந்நியர்களும் U.K ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்வதற்கு முயற்சி செய்கின்றனர். இந்த அடிப்படையில் ஜல்ஸாவின் பணியாளர்களின் பொறுப்பு மிகவும் அதிகமாகி விடுகின்றது. பிறகு இங்கு ஹதீகத்துல் மஹ்தியில் தற்காலிக நகரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளும் குறிப்பான கவனத்தை எதிர்பார்க்கின்றது. ஆக இந்த அடிப்படையில் நான் பணியாளர்களுக்கு அவர்களின் டியூட்டி மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கவனமூட்டி வந்துள்ளேன். இப்போதும் இது தொடர்பாக முதலில் எடுத்துக் கூறுவேன்.

அல்லாஹ்வின் அருளால் U.K ல் வசிக்கக்கூடிய அஹ்மதி முதியோர்கள், இளைஞர்கள், குழந்தைகள், பெண்கள் ஆகியோர் கடந்த 35 ஆண்டுகளாக அதாவது எப்போதிருந்து கிலாஃபத்தின் தலைமையகம் இங்கு இடம் பெயர்ந்ததோ காலத்தின் கலீஃபாவின் தலைமையில் ஜல்ஸாவின் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். மேலும் டியூட்டியை மன மகிழ்ச்சியுடன் கொடுக்கின்றனர். எவ்வாறிருப்பினும் இன்று நாம் பார்க்கின்றோம். ஏற்பாடு ரீதியில் இங்குள்ள பணியாளர்கள் ரப்வாவின் பணியாளர்களுக்கு உதவி செய்வதற்கான தகுதியையும் பெற்றிருக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் நாம் பார்க்கின்றோம். அதாவது நான்கு ஐந்து ஆயிரம் நபர்களுக்கு உணவிற்கான ஏற்பாடுகளைச் செய்வது ஏற்பாட்டாளர்களுக்கு எத்தகைய சவாலான நேரமாக அது இருந்தது? மேலும் 90 சதவிகித ரொட்டிகள் கடை வீதிகளிலிருந்து வாங்கப்பட்டது. ஆனால் இப்போது அல்லாஹ்வின் அருளால் 35, 40 ஆயிரம் நபர்களுக்கு ரொட்டிகளை இவர்களே தயார் செய்கின்றனர். லட்சக்கணக்கில் ரொட்டி தயார் செய்யப்படுகின்றது. மேலும் அதனை நான் அவ்வப்போது செக் செய்தும் பார்த்தேன். மக்களுக்கும் விருப்பத்திற்குரியதாக இருக்கிறது. எனக்கும் இந்த ரொட்டி பிடித்தமானதாக உள்ளது. ஆரம்பத்தில் இருந்த

ரொட்டியை விட இந்த ரொட்டி மிகவும் நல்ல முறையில் தயார் செய்யப்படுகின்றது. அல்லாஹ் பணி செய்கின்ற இந்த இளைஞர்களின் திறமைகளை மேலும் அதிகப்படுத்துவானாக. மேலும் அவர்களுக்கு அறிவையும் வழங்குவானாக. மேலும் இவர்கள் ஜல்ஸாவின் விருந்தாளிகளுக்கு முன்பை விட அதிகமாக தொண்டாற்றக்கூடியவர்களாக இருப்பார்களாக.

அதே போன்று லங்கர் கானாவில் உணவு சமைப்பதற்கான குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் தத்தமது இன்சார்ஜ்களுடன் மிகவும் முயற்சி செய்தவாறு உளப்பூர்வமாக பணி செய்கின்றனர். பிறகு லங்கர் கானாவில் சட்டிப் பானையை கழுவக்கூடிய துறை இருக்கின்றது. இதுவும் மிகப்பெரிய பணியாகும். காதியானில் இந்த பணி வேலையாட்களுக்கு கூலி கொடுத்து செய்யப்படுகிறது. ஆனால் இங்கு மிகவும் கலப்பற்ற தன்மை மற்றும் உணர்வுடன் பணியார்கள் இந்த பணியை செய்கின்றனர்.

பிறகு உணவு பரிமாறுவதற்கான துறை இருக்கிறது. இதிலும் இவர்கள் முன்னேற்றத்திற்கான முயற்சியை செய்துள்ளனர். விருந்தினர்கள் குறைவான நேரத்தில் நிம்மதியகாக உணவு சாப்பிட்டு விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காக கூடாரத்தை விரிவுபடுத்தியுள்ளனர்.

இதே போன்று மற்ற துறைகளும் உள்ளன. தூய்மை தொடர்பான துறை உள்ளது. பார்க்கிங் துறை, டிராஃபிக் துறை, மாநாட்டுத் திடலில் பல்வேறு துறைகள் உள்ளன. பாதுகாப்புத்துறை மிகவும் முக்கியமான ஒரு துறையாகும். இதே போன்று மேலும் பல துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு துறையும் தத்தமது வட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த அனைத்து துறைகளிலும் ஆயிரக்கணக்கான பணியாளர்களுக்கு பணி செய்யக்கூடிய நற்பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதே போன்று பெண் பணியாளர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கும் பணி செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் பணி செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இந்த பணியாளர்களிடம் எப்போதும் நான் கூறி வருகின்றேன். அதாவது உங்களது பணி என்னவென்றால், எந்த உணர்வுடனும், ஆர்வத்துடனும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக உங்களை அர்ப்பணித்துள்ளீர்களோ அந்த உணர்வை இறுதி நேரம் வரை நிலைத்திருக்க செய்யுங்கள். நீங்கள் நிலைத்திருக்கச் செய்த உணர்வு எவ்வாறு வெளிப்பட வேண்டும் என்றால் நீங்கள் சிரித்த முகத்துடன் விருந்தினர்களுடன் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வதில் வெளிப்பட வேண்டும்.

எனவே ஜல்ஸாவின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக பல்வேறு இடங்களில் பணி செய்கின்ற பணியாளர்களும், பணிப் பெண்களும் இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த ஜல்ஸாவின் இரண்டு மடங்கு கூலியைப் பெறக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். மேலும் அருட்களைப் பெறக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். ஒன்று ஜஸ்லாவில் கலந்து கொண்டு அதன் அருட்களை பெறுபவர்களாகவும், மற்றொன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்து அதன் அருட்களைப் பெறுபவர்களாகவும் இருக்கிறீர்கள்.

விருந்து உபசரிப்பு அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாகும். எந்த அளவுக்கு அல்லாஹ்வுக்கு விருப்பமானதென்றால் இதைப் பற்றி ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தொடர்பாக திருக்குர்ஆனில் இரண்டு முறை அல்லாஹ் கூறியுள்ளான். விருந்தாளிக்கு உணவு கொடுப்பது சாதாரண விஷயம் என்றால் பிறகு விருந்தாளிகள் வரும்போது ஒவ்வொரு முறையும் அவர்களுக்கு உணவு கொடுப்பது தொடர்பாகவும் கூறப்பட்டிருக்காது. இது தொடர்பான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய நடைமுறை நம்முன் இருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொண்டுள்ளவர்களை எந்த மூன்று விஷயங்களை செய்யும்படி கூறியுள்ளார்களோ அவை அனைத்தும் ஒருவருக்கொருவர் செலுத்த வேண்டிய உரிமை தொடர்புடையதாக இருக்கின்றது. சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவதுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

முதல் விஷயம் என்னவென்றால், நல்ல விஷயத்தைப் பேசுங்கள். அல்லது அமைதியாக இருங்கள். அநாவசியமான பேச்சுக்களைப் பேசி அமைதியற்ற சூழலை உருவாக்காதீர்கள். பிறருக்கிடையில் வெறுப்பை ஏற்படுத்தாதீர்கள். ஒரு நம்பிக்கையாளர் வீணான மற்றும் தேவையில்லாத விஷயங்களைப் பேச மாட்டார். இரண்டாவதாக, உங்களது அண்டை அயலாருக்கு கண்ணியமளியுங்கள். அவருக்கு செலுத்த வேண்டிய மிகப்பெரிய உரிமை என்னவென்றால், அவருக்கு கண்ணியமளிக்க வேண்டும். அவரைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதாகும். மூன்றாவதாக, உங்களது விருந்தினர்களுக்கு கண்ணியம் வழங்குங்கள் என்று அன்னார் கூறினார்கள். இது குறிப்பாக விருந்து உபசரிப்பு செய்பவர்களுக்குரியதாகும். ஒரு அழகான, அமைதி நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்கு இது அடிப்படையானதாகும். அல்லாஹ்வின் கட்டளைகளில் இதுவொரு கட்டளையாகும். மேலும் இது ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அதிகமான விருந்தினர்கள் வருகை தந்தபோது சஹாபாக்களிடம் அன்னார் பங்கிட்டுக் கொடுப்பார்கள். பிறகு விருந்தாளிகளிடம், உங்களது சகோதரர் உங்களுக்கு விருந்து உபசரிப்பு சிறந்த முறையில் செய்தாரா? என்றும் கேட்பார்கள். சஹாபாக்களும் பெருமானார் (ஸல்) அவர்களின் நெருக்கத்தையும் பெற்றிருந்தார்கள். அன்னாரின் தர்பிய்யத்தையும் பெற்றிருந்தார்கள். அன்னாரிடமிருந்து அருளைப் பெறக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் எத்தகைய விருந்து உபசரிப்பைச் செய்தார்கள் என்றால், எங்களுக்கு விருந்து உபசரிப்பு செய்தவர்கள் தம்மை விட எங்களையே நல்ல விதமாக கவனித்தனர்; மேலும் சிறந்த உணவை வழங்கினார்கள் என்று விருந்தினர்கள் பதிலளித்தனர். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் விருந்து உபசரிக்கும் வழிமுறையாக இருந்தது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே நாம் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளோம். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் வசதி வாய்ப்புகள் முன்பை விட அதிகமான ஆகிவிட்டன. மேலும் ஜமாஅத்தின் அமைப்பின்கீழ் விருந்து உபசரிப்பு செய்யப்படுகின்றது. ஆனால் சஹாபாக்களின் நிலை இவ்வாறு இருக்கவில்லை. அதாவது அவர்களுக்கு தலைமையக ஏற்பாடும் இருக்கவில்லை. அவர்களில் பெரும்பான்மையானவர்களில் தனிப்பட்ட நிலையும் சிறந்ததாக இருக்கவில்லை. மாறாக, எத்தகைய சம்பவங்கள் கிடைக்கின்றனவென்றால், அவர்கள் தமது குழந்தைகளை பட்டினியாக தூங்கச் செய்தனர். கணவனும், மனைவியும் பட்டினியாக தூங்கினர். ஆனால் விருந்தினர்களுக்கு அவர்களிடம் இருந்த உணவைக் கொண்டு பரிமாறினர். அவர்களது இந்த செயலை அல்லாஹ் பாராட்டினான். மேலும் மகிழ்ச்சியடைந்தான். மேலும் இந்த சிறப்பான சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தான்.

ஆக எவர்களின் அழகிய முன்மாதிரியை கடைபிடிக்கும்படி நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளதோ அதற்கேற்ப அம்மக்கள் தியாகம் செய்து விருந்து உபசரிப்பு செய்து வந்தனர். மேலும் இன்று அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் அதிகமான மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் தியாக உணர்வுகளுடன் விருந்து உபசரிப்பு செய்கின்றனர். மேலும் இதனையே நாமும் செய்ய வேண்டும்.

பிறகு டியூட்டியில் இருக்கின்ற பணியாளர்களில் ஒவ்வொருவரும் நூறு சதவீத தியாக உணர்வுடன் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இத்தகைய பல சம்பவங்கள் இருக்கின்றன. அதன் மூலம் அன்னார் விருந்தினர்களை கண்ணியப்படுத்தியது மற்றும் விருந்து உபசரிப்பின் உயர் தரத்தை நிலைநாட்டியது தெரிய வருகிறது.

ஒரு முறை தொலை தூரப் பகுதிலிருந்து வந்திருந்தவர்களை லங்கர் கானாவின் பணியாளர்கள் அவர்களது பொருட்களை குதிரை வண்டியிலிருந்து இறக்க மாட்டோம் என்று கூறியதால் கோபமடைந்து திரும்பிச் சென்று விட்டனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்தது. அன்னார் காலணிகளை அணிய நேரமின்றி உடனே அவர்களை பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்தார்கள். எவ்வாறிருப்பினும் அந்த மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருவதைக் கண்டு தமது குதிரை வண்டியை நிறுத்தினார்கள்.

குதிரை வண்டியிலிருந்து இறங்கினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களிடம் வருத்தம் தெரிவித்தார்கள். மேலும் திரும்பி வருமாறு கூறினார்கள். அவர்களது குதிரை வண்டி திரும்பி வந்தபோது, அன்னார் அவர்களிடம் நீங்கள் அமர்ந்து வாருங்கள். நான் உங்களுடன் நடந்து வருகின்றேன் என்று கூறினார்கள்.

விருந்தினர்கள் வெட்கமடைந்தனர். அவர்கள் குதிரை வண்டியில் அமரவில்லை. மாறாக, நடந்தே வந்தனர். இறுதியில் அம்மக்கள் லங்கர் கானா திரும்பி வந்ததும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அந்த மக்களின் பொருட்களை இறக்க ஆரம்பித்தார்கள். ஏற்கனவே வெட்கப்பட்டிருந்தனர். எனவே அவர்கள் உடனடியாக முன் வந்து விருந்தினர்களின் பொருட்களை இறக்கினர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களுக்குரிய தங்குமிடம், உணவிற்கான ஏற்பாடு போன்றவை அவர்களுக்கு திருப்திகரமாக இருக்கின்ற வரையில் அங்கு இருந்தார்கள். அன்னார் தமது பணியாளர்களிடம், பாருங்கள் அதிகமான விருந்தினர்கள் வருகின்றனர். இவர்களில் சிலரை நீங்கள் அறிவீர்கள். சிலரை அறிய மாட்டீர்கள். எனவே அனைவரும் கண்ணியத்திற்குரியவர்கள் என்று கருதி அவர்களுக்கு உபசரிப்பு செய்யுங்கள். அவர்களுக்கு தொண்டு செய்யுங்கள்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் விருந்தினர்களுக்கு நிம்மதிக்கான ஏற்பாட்டைச் செய்வீர்கள் என்று உங்கள் மீது எனக்கு நல்லெண்ணம் இருக்கின்றது. ஆக இந்த நல்லெண்ணத்தை இன்றும் நாம் நிலைநாட்ட வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதற்குப் பிறகு நான் விருந்தினர்களுக்கும் சிலவற்றை கூற விரும்புகின்றேன். ஒருவர் மற்றவரது உணர்வுகளை கருத்தில் கொள்ள வேண்டும். இது அனைவரது கடமையாகும். அதாவது விருந்தினர்கள் மற்றும் விருந்து உபசரிப்பு செய்பவர்களின் கடமையாகும். இஸ்லாம் விருந்தினர்களின் கண்ணியம் தொடர்பாக கட்டளையிடும் அதேவேளையில், விருந்தினர்களிடம் நீங்கள் விருந்து உபசரிப்பு செய்பவர்களுக்கு அதிக சுமையாக இருக்காதீர்கள் என்றும் கட்டளையிட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அதிகமான நாட்கள் எவரது வீட்டிலாவது விருந்தாளியாக தங்குவது, வீட்டிலுள்ளவர்களுக்கு சுமையாக ஆகுவது என்பது எதைப்போன்றதென்றால் நீங்கள் சதகாவைப் பெறுவதைப் போன்றதாகும்.

ஆரம்பத்திலிருந்து இறுதி வரை ஒரே போன்று விருந்து உபசரிப்பு செய்வது என்பது எல்லாராலும் இயலாது. எனவே விருந்தாளிகளிடமும், நீங்களும் வீட்டிலுள்ளவர்களை கருத்தில் கொள்ளுங்கள் என்றே கட்டளையிடப்பட்டுள்ளது. ஏற்பாட்டாளர்களுக்கு நான் இதனையும் கூறி விடுகின்றேன். அதாவது நமது ஜல்ஸாவிற்கு வந்துள்ள விருந்தாளிகள் ஒரு மாதம் தங்கினாலும் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். நாம் மூன்று நான்கு நாட்களுக்குப் பிறகு விருந்து உபசரிப்பை முடித்து விடலாம் என்று கருதக்கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பணிகள் தொடர்பாக லங்கர் கானா நிறுவப்படுவதையும் கூறியுள்ளார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் லங்கருக்கு வருபவர்களிடம் சிறந்த நல்லொழுக்கத்தை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

பிறகு குறிப்பாக சலாத்தை பரப்புவதை விருந்தாளிகள் இந்த ஜல்ஸாவின் சூழலில் செயல்படுத்த வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுவர்க்கத்திற்கு செல்லக்கூடியவர்களின் ஒரு சிறப்பம்சமாக அவர்கள் சலாத்தை பரப்பக் கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் பிறருக்கு நீங்கள் சலாம் கூறுங்கள்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஜல்ஸாவின் நோக்கங்களில் ஒரு நோக்கமாக இதையும் கூறினார்கள். அதாவது மக்கள் ஒன்று கூட வேண்டும். இவ்வாறு ஒன்று கூடுவதனால் ஒருவர் மற்றவருக்கிடையே அன்பின் தொடர்பு, மற்றும் அறிமுகம் அதிகமாகும். பகைமையும் நீங்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஜல்ஸாவிற்கு வந்து, உலகத்தின் மீதான அன்பு குளிர்ந்து விட வேண்டும். மேலும் இறைவன் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பும் உள்ளத்தில் மிகைத்து விட வேண்டும் என்ற இந்த நோக்கத்தை முழுமை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஆக இந்த அன்பைப் பெறுவதற்காக ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளில் நாம் குறிப்பாக பங்கு பெற வேண்டும். பிறகு அதைக் கேட்டு சிந்திக்க வேண்டும். ஜல்ஸாவின் போதும், நடக்கும் போதும் இறைவனை அதிகமாக நினைவு கூற வேண்டும். ஜமாஅத்தான தொழுகையை குறிப்பான கவலையுடனும், கவனத்துடனும் நிறைவேற்ற வேண்டும். மற்றும் நவாஃபில் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகை தொழுவதன் பக்கமும் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். குறிப்பாக இங்கு தங்கியிருப்பவர்கள் இந்த சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். தமது நிலைமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இவ்வாறே ஏற்பாடு ரீதியாக விருந்தினர்கள் இதையும் கருத்தில் கொள்ளவும். அதாவது தற்காலிக மற்றும் பரந்த ஏற்பாடுகளில் சில குறைகளும் இருந்து விடுகிறது. எங்கேயாவது ஏதாவதொரு இத்தகைய நிலை தென்பட்டால் பொறுத்துக் கொள்ளுங்கள். விருந்தினர்ககளின் பணியும் என்னவென்றால், குறைகளை பொறுத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய குறைகளைப் பார்க்கும்போது பணியாளர்களுக்கு உதவுங்கள். சில விருந்தினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவர்களே விருந்து உபசரிப்பு செய்பவர்களாக மாறி பணி செய்வதை நான் பார்த்துள்ளேன்.

இந்த உணர்வே ஓர் அஹ்மதியிடம் இருக்க வேண்டும். மேலும் இதுவே கலப்பற்ற சமூகத்தை நிலைபெறச் செய்வதற்கான ஒரு உண்மையான ஆன்மா ஆகும். விருந்தினர்கள் பணியாளர்களை சோதித்துப் பார்ப்பதில் தமது நேரத்தை வீணாக்க வேண்டாம். மாறாக, தேவை ஏற்பட்டால் ஒவ்வொரு துறையிலும் நான் கூறியது போன்று உதவியாளராக ஆகி விடுங்கள்.

அதே போன்று பார்க்கிங் இருக்கிறது. சில நேரங்களில் அதிக கூட்டம் ஏற்படுவதால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அத்தகைய நிலைமைகளில் காரில் வரக்கூடியவர்கள் பொறுமை மற்றும் பரந்த மனப்பான்மையை ஏற்பாட்டாளர்களிடம் வெளிப்படுத்தியவாறு அவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இதே போன்று நுழைவு வாயிலில் ஸ்கேனிங் ஏற்பாடு உள்ளது. அங்கும் ஒவ்வொருவரும் முழுமையான முறையில் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும்.

பிறகு மாநாட்டுத் திடலில் அமரக் கூடியவர்கள் வலப் புறமும், இடப் புறமும் பார்வையை வைத்திருங்கள். அதே போன்று இங்குமங்கும் செல்லும் போதும் தமது சுற்றுச்சூழலின் மீது பார்வையை வைத்திருங்கள். பாதுகாப்பு தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் தரப்பிலிருந்து எந்த வழிகாட்டல் வழங்கப்பட்டாலும் அதன்படி செயல்பட முழுமையாக முயற்சி செய்யுங்கள். இதை விட அதிகமாக ஜல்ஸாவின் வெற்றி மற்றும் நீங்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்ட நோக்கத்தை முழுமை செய்வதற்காகவும், எதிரியின் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்காகவும் தொடர்ந்து துஆ செய்து கொண்டிருங்கள். இன்றைய நாட்களில் பாகிஸ்தான் அஹ்மதிகளின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அமைதிகரமான வாழ்க்கையை வழங்குவானாக. அல்லாஹ் அவர்களை ஒவ்வொரு தீங்களிலிருநதும் பாதுகாப்பாக வைப்பானாக. எதிரிகளின் பழைய அல்லது புதிய திட்டங்களை தோல்வியுறச் செய்வானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது மட்டுமின்றி ஓர் அறிவிப்பும் உள்ளது. MTA International தரப்பிலிருந்து அவர்களது ஒரு புதிய App இன்று Launch ஆக உள்ளது. அது Smart Tv App ஆகும். எந்தவொரு நாட்டிலும் இந்த App ஐ Download செய்து LG, Philips, Amazon, Fire Tv, Sony மற்றும் Android TV ஆகியவற்றில் Dish Antona இல்லாமலேயே MTA வின் அனைத்து Channel ஐயும் பார்க்க முடியும். அல்லாஹ்வின் அருளால் இந்த App மூலமாக வெளியில் உள்ளவர்களும் இதிலிருந்து பயன்பெற முடியும். இப்போது ஜுமுஆவிற்குப் பிறகு இதை நான் Launch செய்வேன். அல்லாஹ் எல்லா வகையிலும் ஜல்ஸாவை அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் அனைவருக்கும் இதிலிருந்து முழுமையாக பயன் பெறுவதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் A.கலீல் அஹ்மது**